செ.வெ.எண்-57 நாள்-30.01.2019

# பத்திரிக்கைச் செய்தி

மகிளா சக்தி கேந்திரா திட்டத்தில், அரியலூர் மாவட்ட சமூக நல அலுவலக கட்டுப்பாட்டில் பணிபுரிய கீழ்க்கண்ட பதவிகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**<u>மகளிர் நலஅலுவலர் பணி:</u>**

மனிதநேயம் / சமூக அறிவியல் / சமூகபணியில் (Master In Humanities / Social science / MSW) முதுகலைபட்டம், தமிழ், ஆங்கிலப்புலமை, சமூகபணியில் அனுபவம், 35 வயதுக்குட்பட்ட மகளிர் மட்டும்.

**<u>மாவட்டஒருங்கிணைப்பாளர் பணி:</u>**

மனிதநேயம் / சமூக அறிவியல் / சமூகபணியில் (Degree in Humanities / Social science / BSW) இளங்கலைபட்டம், பெண்களுக்கு இழைக்கப்படும் பிரச்சனைகள் குறித்து அறிந்திருத்தல், 35 வயதுக்குட்பட்ட மகளிர், கணினி பயன்பாட்டில் அனுபவம்.

அனைத்து சான்றிதழ் நகல்களிலும் சுய சான்றொப்பமிட்டு, சுய விலாசமிட்ட அஞ்சல் உறையுடன் **14.02.2019 மாலை** 4.30 மணிக்குள், நேராடியாகவோ, தபால் மூலமாகவோ, மாவட்ட சமூக நல அலுவலகம், அறை எண்.20, தரைதளம், மாவட்ட ஆட்சியர் வளாகம் அரியலூர் என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை சமர்பிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**